# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
### Sessions Case No.5/2026

**Deposition of Witness for Prosecution PW 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சத்தியமூர்த்தி | Father's Name | : | தியாகராஜன் |
| Village | : | மஞ்சகொல்லை | Taluk | : | கொரடாச்சேரி |
| Calling | : | | Age | : | 38 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 24th day of February 2026.**

**(A1 & A2 are present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது மஞ்சகொல்லையில் வசித்து வருகிறேன். 24.06.2014 ம் தேதி பகல் 11.00 மணியளவில் நானும் வல்லரசும் மஞ்சகொல்லை ரயில்வே கேட் அருகே நடந்து சென்று கொண்டிருந்தபோது அன்றைய தினம் அதிகாலை விடுதலை சிறுத்தை கட்சியின் கொடி மரங்கள் சேதப்படுத்தப்பட்டதை போலீசார் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் 2 வது சாட்சியாக நானும் முதல் சாட்சியாக வல்லரசும் கையெழுத்து போட்டோம். அந்த

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.24 16:27:59 +0530

பார்வை மகஜர் **அ.சா.ஆ.2**. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

நான் கையெழுத்து ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது, போலீசார் வெள்ளை பேப்பரில் கையெழுத்து வாங்கி கொண்டார்கள். நான் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டேன், அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.24 16:28:04 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
### Sessions Case No.5/2026

### Deposition of Witness for Prosecution PW 4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | கமலதாசன் | Father's Name | : | காசிநாதன் |
| Village | : | நாளில்ஒன்று | Taluk | : | கொரடாச்சேரி |
| Calling | : | | Age | : | 42 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 24th day of February 2026.**

**(A1 & A2 are present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது நாளில்ஒன்றில் வசித்து வருகிறேன். நான் டிரைவர் வேலை பார்க்கிறேன். என்னிடம் காட்டப்படும் கார்த்திகேயனின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது சாட்சி கையெழுத்து என்னுடையது. முதல் சாட்சி கையெழுத்தை சுப்புடு (எ) சுப்பிரமணியன் போட்டார். என்னுடைய கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.3**. அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

SELVA MUTHU KUMARI    Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2026.02.24 16:28:11 +0530

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் 08.07.2017 ம் தேதி மாலை 5.00 மணியளவில் நானும் சுப்பிரமணியனும் கொரடாச்சேரி ரயில்வே கேட் அருகே சென்று கொண்டிருந்தபோது கார்த்திகேயன் என்பவரையும் மனோபாலன் என்பவரையும் போலீசார் பிடித்து விசாரிக்க கார்த்திகேயன் என்பவர் போலீசாரிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் எனவும் அதில் நானும் சுப்பிரமணியனும் சாட்சிகளாக இருந்து கையெழுத்து போட்டோம் எனவும் அதில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும் எனவும் சொன்னால் தவறு. எதிரிகள் எனக்கு வேண்டப்பட்டவர்கள் என்பதால் தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.24 16:28:17 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

**DEPOSITION OF WITNESS**

**Chapter XXIII Code of Criminal Procedure**

**IN THE COURT OF SESSIONS JUDGE**

**TIRUVARUR**

**Sessions Case No.5/2026**

**Deposition of Witness for Prosecution PW 5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ராஜகோபால் | Father's Name | : | பொன்னுதுரை |
| Village | : | வைப்பூர் | Taluk | : | திருவாரூர் |
| Calling | : | | Age | : | 57 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 24th day of February 2026.**

**(A1 & A2 are present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது வைப்பூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கொரடாச்சேரி காவல் ஆய்வாளராக நிலைய பொறுப்பிலிருந்தபோது 24.06.2017 அன்று காலை 10.00 மணிக்கு விடுதலை சிறுத்தை கட்சியை சேர்ந்த மாவட்ட நில உரிமை மீட்புபணி அமைப்பாளர் தெட்சிணாமூர்த்தி மகன் சுடர்வளவன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று கொரடாச்சேரி காவல் நிலைய கு.எண் 158/2017, இதச பிரிவு 504 மற்றும் 3(1) of TNPPDL Act ன் கீழ்

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.24 16:28:24 +0530

நான் பதிவு செய்த முதல் தகவலறிக்கை **அ.சா.ஆ.4**. அன்றைய தினமே காலை 11.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் வல்லரசன், சத்தியமூர்த்தி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.5**. 24.06.2017 அன்று சாட்சிகள் சுடர்வளவன், சசிகுமார், பாலாஜி, பிரபு, வல்லரசன், சத்தியமூர்த்தி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். 08.07.2017 அன்று 17.00 மணிக்கு கொரடாச்சேரி ரயில்வே கேட் அருகே பார்ட்டி சகிதமாய் ரோந்து சுற்றி வரும்போது இவ்வழக்கின் எதிரிகள் கார்த்திகேயன், காசி (எ) மனோபாலன் ஆகியோரை குற்ற காரணம் கூறி கைது செய்து சாட்சிகள் சுப்புடு (எ) சுப்பிரமணியன், கமலதாசன் ஆகியோர் முன்னிலையில் 1ம் எதிரி கார்த்திகேயன் எவ்வித அச்சுறுத்தலும் இல்லாமல் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். 08.07.2017 அன்று சாட்சிகள் சுப்புடு (எ) சுப்பிரமணியன், கமலதாசன் ஆகியோரை விசாரித்து ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். 09.07.2017 அன்று சாட்சிகள் சுப்பிரமணியன், கமலதாசன் ஆகியோர்களை மீண்டும் விசாரித்து மறு வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். எனது புலன் விசாரணை முடித்து 13.07.2017 அன்று எதிரிகள் மீது இதச பிரிவு 504 மற்றும்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.24 16:28:29 +0530

3(1) of TNPPDL Act ன்கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். எனது விசாரணையில் சாட்சிகள் சுடர்வளவன், சசிகுமார், கமலதாசன் ஆகியோர் சம்பவம் பற்றி கூறியதையே நான் வாக்குமூலங்களாக பதிவு செய்துள்ளேன்.

**குறுக்கு விசாரணை**

பொய்யாக கொடுக்கப்பட்ட புகாரினை சரிவர விசாரணை செய்யாமல் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் தவறு. சம்பவ இடம் செல்லாமலும் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமலும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் தவறு. எதிரிகள் சொன்ன இடம், நேரத்தில் கைது செய்யப்படவில்லை என்றால் தவறு. வழக்காவணங்கள் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டவை என்றால் தவறு. ஆஜர் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்புமில்லை என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2026.02.24 16:28:35 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.